வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 05.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில், புனித நீராடினார்.

டெல்லியில், 70 உறுப்பினர் சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடையே, இன்று நடைபெற்றது.

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், open-AI நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு. சாம் ஆல்ட்மேனை சந்தித்து பேசினார்.

புதிதாக கண்டுபிடிக்கப்படும் மருத்துவ தொழில்நுட்பங்கள், சாதாரண மக்களுக்கும் ஏற்றதாக அமைதல் அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.

-----------------------------

மோடி-கும்பமேளா 1 (8)

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில், புனித நீராடினார். சங்கமக் குளியல், தெய்வீகத்துடன் தொடர்பு கொள்ளும் தருணம் என்றும், மஹா கும்பமேளாவில் பங்கேற்கும் பல கோடி பக்தர்களை போலவே தாமும், தெய்வீக உணர்வால் நிறைக்கப்

பட்டுள்ளதாகவும், சமூக ஊடகப் பதிவில் அவர் கூறியுள்ளார். நாட்டு மக்கள் அனைவருக்கும், அமைதி, விவேகம், ஆரோக்கியம், மற்றும் நல்லிணக்கத்தை கங்கா மாதா அருளட்டும் என தாம் வேண்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(வாய்ஸ்)

மோடி-கும்பமேளா 2 (14)

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பிரயாக்ராஜில், கங்கைக் கரையில் இருந்து, திரிவேணி சங்கமத்திற்கு படகில் சென்ற போது உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உடன் இருந்தார். திரிவேணி சங்கமத்தில் பிரதமர் ஆரத்தி பூஜை செய்து, கங்கா-யமுனா-சரஸ்வதி நதிகளை வழிபட்டார்.

உலகின் மிகப் பெரிய மக்கள் கூடல் நிகழ்வாகத் திகழும் மஹா கும்பமேளா, கடந்த மாதம் 13ஆம் தேதி தொடங்கியது முதல், இதுவரை, 33 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடி உள்ளனர். நாட்டின் ஆன்மீக மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பேணிக் காப்பதில், அரசுக்குள்ள உறுதிப்பாட்டின் ஒருபகுதியாக, நாட்டின் முக்கிய யாத்திரைத் தலங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிரயாக்ராஜ் வந்தபோது, மொத்தம் 500

கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களை தொடக்கி வைத்ததும் குறிப்பிடத்தக்கது.

------------------------------

டெல்லி தேர்தல் 1 (17)

டெல்லியில், 70 உறுப்பினர் சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடையே, இன்று நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்ற வாக்குப்பதிவில், மாலை 5 மணி வரை, 57.7 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், மத்திய அமைச்சர்கள் டாக்டர் ஜெய்சங்கர்-திரு. ஹர்தீப் சிங் புரி, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி, டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா, டெல்லி முதலமைச்சர் திருமதி அதீஷி உட்பட தலைவர்கள் பலரும், தத்தம் தொகுதிகளில் வாக்களித்தனர்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், நார்த் அவென்யூ தொகுதியில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் வாக்களித்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில், ஜனநாயகத்தின் ஆக்ஸிஜனே, வாக்குரிமைதான் என்றும், எல்லா உரிமைகளுக்கும் அடிப்படையான வாக்குரிமையை விட பெரிய உரிமை, வேறு எதுவும் இல்லை என்று கூறினார். உலகின் மிகப் பழமையான, மிக துடிப்பான ஜனநாயக நாடு இந்தியாதான் என்றும், இந்தியாவில் ஆட்சி மாற்றம், தேர்தல் மூலமாக மட்டுமே நடப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டெல்லி தேர்தல் 2 (4)

டெல்லி சட்டமன்றத் தேர்தலுடன் சேர்த்து, உத்தரபிரதேசத்தின் மில்கிபூர் சட்டமன்றத் தொகுதி, மற்றும், தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியிலும் இடைத் தேர்தல் வாக்குப்பதிவு, இன்று நடைபெற்றது. இறுதி வாக்குப்பதிவு சதவிகிதம் பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

-----------------------------

அமித் ஷா (10)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ஜம்மு-காஷ்மீர் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து, புதுடெல்லியில் இன்று 2ஆவது நாளாகவும் அதிகாரிகளுடன் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகள் காரணமாக, ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதச் சூழல் பலவீனம் அடைந்துள்ள போதிலும், பாதுகாப்பு ஏஜென்சிகள், தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தை மேலும் வலுப்படுத்தி, ஊடுருவலை முற்றிலுமாக தடுக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தினார். போதை மருந்து கடத்தல் மூலமாக தீவிரவாதிகளுக்கு பணம் திரட்டப் படுவதை கடுமையாக தடுக்க வேண்டியது அவசியம் என்றும், உள்துறை அமைச்சர் வலியுறுத்தினார்.

----------------------------

வைஷ்ணவ் (9)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், open-AI நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு. சாம் ஆல்ட்மேனை சந்தித்தார். செயற்கை

நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் எல்லா அம்சங்களையும் உருவாக்குவதற்கான உத்திகள் குறித்து, திரு. ஆல்ட்மேனுடன் அருமையான விவாதங்களை நடத்தியதாக, அவர் தெரிவித்தார். தொழில்நுட்பத்தை ஜனநாயகப் படுத்துவதில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தங்களை வழிநடத்துவதாகவும், பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை, திரு. ஆல்ட்மேன் பாராட்டியதாகவும், அமைச்சர் கூறினார்.

-----------------------------

*கைலாஷ் நாதன் 1 (15)*

புதுப் புது நோய்களால் பல சவால்களை எதிர்கொள்ளும் இன்றைய உலகில், புதிய மருந்துகளும், மருத்துவ தொழில்நுட்பங்களும், சாதாரண மக்களுக்கும் ஏற்றதாக அமைதல் அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார். இதை கருத்தில் கொண்டே, குறைந்த செலவில் மருத்துவ சேவைகள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையிலான ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்படுத்தி வருவதாக, அவர் தெரிவித்துள்ளார். இன்று, மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரியில், இங்கிலாந்து நாட்டின் லீட்ஸ் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 3ஆவது சர்வதேச சுகாதாரம் மற்றும் ஆராய்ச்சி மாநாட்டை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இதை தெரிவித்தார்.

முழுமையான உடல்நலப் பரிசோதனையை கிராமப்புறங்களுக்கும் எடுத்துச் செல்ல, கூடுதல் முயற்சிகள் தேவைப் படுவதாக துணை நிலை ஆளுநர் கூறினார். புதுச்சேரியில் 9 மருத்துவக் கல்லூரிகள் இருப்பதால்,

நாட்டின் முக்கிய மருத்துவ மையமாக புதுச்சேரியை மேம்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

------------------------------

*இயற்கை வேளாண்மை (8)*

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய படஜெட்டில், தேசிய இயற்கை வேளாண்மை இயக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு, 516 கோடி ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. இயற்கை விவசாயத்தை ஊக்குவித்து, விவசாயிகள் செயற்கை உரங்களை சார்ந்திருக்கும் நிலையை மாற்றும் நோக்கத்திலான இந்த இயக்கம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தேசிய அளவில் தொடக்கப்பட்டது. புதுச்சேரியிலும், விவசாயிகள் பலர் இயற்கை வேளாண்மைக்கு மாறி வருகின்றனர். 2012ஆம் ஆண்டில் இருந்தே இயற்கை விவசாயத்தில் தாம் ஈடுபட்டு வருவதாக, கரிக்கலாம்பாக்கத்தைச் சேர்ந்த பெண் விவசாயி பாக்கியவதி எமது செய்தியாளரிடம் பேசுகையில், தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்....

(வாய்ஸ்)

------------------------------

*புதுச்சேரி நிதி உதவி* (9)

பாகூரில், அண்மையில் வன்கொடுமை காரணமாக உயிரிழந்த முத்து என்பவரின் குடும்பத்திற்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமான, 4 லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாய் நிதி உதவியை, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, உயிரிழந்த நபரின் மனைவியிடம் வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில்

நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-----------------------------

*அஇஅதிமுக மனு* (12)

முதுகலை மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களை, நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில், அகில இந்திய அளவில் நடத்த வேண்டும் என, அண்மையில் உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ள தீர்ப்பு மீது, புதுச்சேரி அரசு சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என கோரி, அஇஅதிமுக, முதலமைச்சர் திரு. ரங்கசாமியிடம் மனு கொடுத்துள்ளது. மாநில அஇஅதிமுக செயலர் திரு. அன்பழகன் இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். மாணவர் சேர்க்கையில், தற்போது உள்ளூர் மாணவர்களுக்கு கிடைக்கும் 50 சதவிகித இடங்கள், நீதிமன்றத் தீர்ப்பினால் இனி கிடைக்காது என்பதால், மாநில அரசு, நீதிமன்றத்தை அணுகுதல் அவசியம் என்றார். முதலமைச்சர் மனுவை பெற்றுக் கொண்டு, அதிகாரிகளுடன் பேசி, உரிய நடவடிக்கை எடுக்க உறுதி அளித்து இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

-----------------------------

*வெங்கட்ராமன்* (7)

முதுபெரும் ஆகாஷ்வாணி செய்தி வாசிப்பாளர் வெங்கட்ராமன், சென்னையில் நேற்றிரவு காலமானார். நிரந்தர ஊழியராகவும், ஒப்பந்த

அடிப்படையிலும், மொத்தம் 64 ஆண்டுகள் தமிழ் செய்தி வாசிப்பாளராக சேவை புரிந்த அவருக்கு வயது 102.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி அதிகாலை, இலங்கைக்கான ஆகாஷ்வாணி ஒலிபரப்பில், இந்தியா சுதந்திரம் அடைந்த செய்தியை, தமிழில் உலகிற்கு அறிவித்த, முதலாவது குரலுக்கு சொந்தக்காரர் வெங்கட்ராமன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

கிரிக்கெட் (8)

ரஞ்சி டிராபி கிரிக்கெட் போட்டித் தொடரில், மும்பை-ஹரியானா அணிகளுக்கு இடையிலான காலிறுதிப் போட்டி, வரும் 8 முதல், 12ஆம் தேதி வரை, ஹரியானா மாநிலம் லாலி-க்கு பதிலாக, கொல்கத்தாவில் நடைபெறும் என, இன்று அறிவிக்கப் பட்டுள்ளது. ஆயினும், இந்த மாற்றத்திற்கான காரணம் வெளியாகவில்லை.

இதே கால அட்டவணைப் படி, புனே, ராஜ்கோட் மற்றும் நாக்பூரில் நடைபெறும் இதர 3 காலிறுதிப் போட்டிகளில், முறையே, ஜம்மு காஷ்மீர் -கேரளா அணிகளும், குஜராத்-சௌராஷ்ட்ரா அணிகளும், விதர்பா-தமிழ்நாடு அணிகளும், மோத உள்ளன.

-----------------------------

டென்னிஸ் (5)

அர்ஜென்டினாவில் நடைபெறும், ரொசாரியோ சேலஞ்சர் டென்னிஸ் போட்டித் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் சுமித் நாகல், காலிறுதிக்கு முந்தையப் போட்டியில், பொலீவிய வீரருடன்

மோதுகிறார். முன்னதாக, ஆரம்ப சுற்றுப் போட்டியில், அர்ஜென்டினா வீரரை அவர் தோற்கடித்து, காலிறுதிக்கு முந்தைய நிலைக்கு முன்னேறினார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில், புனித நீராடினார்.

டெல்லியில், 70 உறுப்பினர் சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடையே, இன்று நடைபெற்றது.

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், open-AI நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு. சாம் ஆல்ட்மேனை சந்தித்து பேசினார்.

புதிதாக கண்டுபிடிக்கப்படும் மருத்துவ தொழில்நுட்பங்கள், சாதாரண மக்களுக்கும் ஏற்றதாக அமைதல் அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.